# பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு
# தென்னை பயிர்ச்செய்கை சபை
# பதவி வெற்றிடங்கள்

**தென்னை பயிர்ச்செய்கை சபையின் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

## பதவி: பிரதிப் பொது முகாமையாளர் (விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி)
## சேவை இடம் : தலைமை அலுவலகம் - 01 வெற்றிடம்

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் விவசாயம் தொடர்பான விசேட பட்டத்துடன் விவசாயம் / விவசாய விரிவாக்கல் தொடர்பான பட்டப் பின்படிப்பு பட்டதாரியாக / விவசாயத் துறையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டய நிறுவனத்தின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இயைபுடைய துறையில முகாமைத்துவ (Managerial) மட்டத்தில் குறைந்தபட்சம் 15 வருட காலம் சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**சம்பள வகுதி : HM 1-1**

**சம்பள அளவு : ரூபா 140,640/- - (4,100x15) 202,140/-**

**01/2025 சுற்றுநிருபத்தின் பிரகாரம் சம்பளம் கொடுப்பனவு செய்யும் விதம்**

| 2025ஆம் வருடத்தில் | 2026ஆம் வருடத்தில் | 2027ஆம் வருடத்தில் |
|---|---|---|
| ரூபா 105,399/- | ரூபா 123,019/- | ரூபா 140,640/- |

**வயது :** 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளவாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**ஆட்சேர்க்கும் முறை:** எழுத்து மூலமான போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் சபையினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும்.

## பதவி: தெங்கு அபிவிருத்தி அதிகாரி - தரம் III
## சேவை இடம் : சேவை தேவைப்பாட்டின் பிரகாரம் நாடு முழுவதும் - 20 வெற்றிடங்கள்

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழில் சார்ந்த நிறுவனத்தினால் விவசாயத் துறைக்கு இயைபான தேசிய தொழிற் திறனில் (N.V.Q) ஐந்தாம் (05) மட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**சம்பள வகுதி: MA 2-3**

**சம்பள அளவு: ரூபா 52,700/- - (800x10) (1,190x11) (1,320x10) (1,350x10) 100,490/-**

**01/2025 சுற்றுநிருபத்தின் பிரகாரம் சம்பள கொடுப்பனவு செய்யும் விதம்**

| 2025ஆம் வருடத்தில் | 2026ஆம் வருடத்தில் | 2027ஆம் வருடத்தில் |
|---|---|---|
| ரூபா 44,867/- | ரூபா 48,784/- | ரூபா 52,700/- |

வயது: 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளவாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**ஆட்சேர்க்கும் முறை :** எழுத்து மூலமான போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் சபையினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும்.

**ஏனைய நிபந்தனைகள்**

I. இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.

II. பதவிக்குரிய கடமைகளை செவ்வனே நிறைவேற்றும் பொருட்டு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கான உடல், உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

III. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பப் படிவங்கள்**

- இதன் பிரகாரம் 2025-10-10ஆம் திகதியில் இயைபுடைய தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் பின்வரும் இணையதளத்தில் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் அல்லது தம்மால் தயாரித்துக்கொண்ட மாதிரியொன்றைப் பயன்படுத்தி விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும். கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் தொடர்பான விபரங்களை உள்ளடக்கி அத்தகைமைகளை உறுதி செய்யக்கூடிய சான்றிதழ்களின் சான்றுபடுத்திய பிரதிகளுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும் தற்போது அரச/ கூட்டுத்தாபன / சபைகளில் சேவையில் உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறு குறிப்பிட்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்காக விண்ணப்பிப்பவர்கள் ஒரு பதவிக்கு ஒரு விண்ணப்பம் வீதம் வெவ்வேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- அனைத்து விண்ணப்பங்களும் 2025-10-10ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ''தலைவர், தென்னை பயிர்ச்செய்கைச் சபை, இல. 9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இங்கு குறிப்பிடப்படாத ஏதாவது விடயங்கள் உள்ளதாயின் அது குறித்து ஆட்சேர்க்கும் அதிகாரியினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும். இப்பதவிகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் தனிப்பட்ட விசாரணைகள் இதற்கான தகுதியீனமாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

**தலைவர்,**
**தென்னை பயிர்ச்செய்கைச் சபை,**
**இல. 9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல**

**மேற்கூறப்பட்ட பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை பின்வரும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றது. அதேபோல் அவ்வாறு பதிவிறக்கம் செய்துகொள்வதற்கு ஏதேனும் அசௌகரியங்கள் இருக்குமாயின் தம்மாலேயே தயாரித்துக்கொண்ட மாதிரியொன்றைப் பயன்படுத்தி விண்ணப்பத்தை அனுப்புமாறு அறிவிக்கப்படுகின்றது.**

**https://coconutsrilanka.lk/**

tamilguru.lk